**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII code of Criminal Procedure)**

**<u>In the Court of XI Additional Special Judge for CBI Cases,</u>**

**<u>Chennai 600 001.</u>**

| | |
|---|---|
| Calender Case | :C.C.No.25/2013 |
| Deposition of witness for | : PW32 |
| Name | : மல்லிகா |
| Father's Name | :W/o.Shanmugam |
| Village | : Pulliyampatti Post, |
| Taluk | : Chengam Taluk, Thiruvannammalai. |
| Caste | : |
| Calling | : |
| Religion | : Hindu |
| Age | : 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on this the **12th** day of December 2019.

-----------------------------------------------------------------------------------------------------------------

**<u>முதல் விசாரணை</u>**

நான் கருங்காலிப்பட்டியில் குடியிருக்கிறேன். விவசாயம் செய்கிறோம். கணவர் பெயர் சண்முகம். ஆண்டிப்பட்டி காந்தம்மாள் பால்பண்ணையிலிருந்து எங்கள் ஊருக்கு வந்து கறவை மாடு வாங்கி தருவதாக சொன்னார்கள். 2011ம் ஆண்டு பாலமுருகன் என்பவர் கறவை மாடு வாங்கிக் தருவதாக சர்க்கரை அட்டை மற்றும் ஓட்டர் ஐ.டி கேட்டார். நானும் கொடுத்தேன். பால் கறந்து பால் பண்ணைக்கு ஊற்றி அந்தக் கடனை கழித்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். என் புகைப்படமும், சர்க்கரை அட்டையும் மற்றும் என் வாக்காளர் அட்டை ஆகியவைகளை கொடுத்தேன். நான் எந்த வங்கிக்கும் செல்லவில்லை. பிறகு எனக்கு வங்கியிலிருந்து நோட்டீஸ் வந்தது. அதன் பிறகுதான் என் பெயரில் கடன் வாங்கியிருப்பது தெரிய வந்தது.

தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் அ.சா.ஆ222ல் உள்ள புகைப்படம் மற்றும் வாக்காளர் அட்டை நகல் மற்றும் ரேஷன் கார்ட்டின் நகல் என்னுடையதுதான். ஃபோட்டோ மட்டும் தான் கொடுத்தேன், கைரேகை எதுவும் வைக்கவில்லை. நான் வங்கியில் விண்ணப்பம் எதுவும் கொடுக்கவில்லை.

தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் அ.சா.ஆ223ல் உள்ள புகைப்படம் என்னுடையதுதான். ஃபோட்டோ மட்டும் தான் கொடுத்தேன், கைரேகை எதுவும் வைக்கவில்லை. நான் வங்கியில் கடன் விண்ணப்பம் எதுவும் கொடுக்கவில்லை.

தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் அ.சா.ஆ224ல் "மல்லிகா" என்ற பெயரில் உள்ள கைரேகை என்னுடையதல்ல. நான் வங்கியில் பணம் எதுவும் வாங்கவில்லை.

இது சம்பந்தமாக சிபிஐ போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**2 முதல் 6 மற்றும் 10ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

மாடு எல்லாம் வைத்திருந்தேன். நான் பள்ளிப்பட்டி வங்கியில் கணக்கு வைத்துள்ளேன். வங்கியின் பெயர் எனக்கு தெரியாது. வங்கியில் கடன் வாங்கியிருப்பேன், அது எனக்கு தெரியாது. புகைப்படம், வாக்காளர் அட்டை ஆகியவை பாலமுருகனிடம் கொடுத்தேன். அவர் எங்கள் ஊர்க்காரர். அவர் என்னுடைய சொந்தக்கார். அவர் மகன் முறை வேண்டும். நான் வங்கியில் கடன் வாங்கிவிட்டு பாலமுருகனை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சிபிஐ என்னை விசாரித்தார்கள். சிபிஐ சொல்லிக்கொடுத்து பொய்சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**7ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.ஆ222, 223, 224 முதலிய ஆவணங்களில் காட்டப்படும் கைரேகைகள் என்னுடையதுதான் என்ற சொன்னால் சரியல்ல. நோட்டீஸ் வந்த பிற்பாடு சட்டப்படியாக நடவடிக்கை எடுக்கவில்லை. செங்கம் முன்சிப் நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் எனக்கு வரவில்லை. அழைப்பாணை வந்தது என்றாலும் கடன் வாங்கியருப்பது உண்மை என்பதால் நான் பதில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. செங்கம் வங்கிக்கு நான் போகவில்லை என்று நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சிபிஐ

சொல்லிக்கொடுத்து செங்கம் SBI வங்கிக்கு எந்தக் காலக்கட்டத்திலும் செல்லவில்லை என்று பொய்சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. கறவை மாடு வாங்கி நான் பயன் அடைந்தேன் என்று சொன்னால் சரியல்ல.

**9ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII code of Criminal Procedure)**

**In the Court of XI Additional Special Judge for CBI Cases,**

**Chennai 600 001.**

| | |
|---|---|
| Calender Case | :C.C.No.25/2013 |
| Deposition of witness for | : PW33 |
| Name | : வேடியம்மாள் |
| Father's Name | : W/o.Kannan |
| Village | : Pulliyampatti Post |
| Taluk | : Chengam Taluk, Thiruvannammalai |
| Caste | : |
| Calling | : |
| Religion | : Hindu |
| Age | : 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on this the **12**th day of December 2019.

---

**முதல் விசாரணை**

நான் கருங்காலிப்பட்டியில் குடியிருக்கிறேன். விவசாயக் கூலி வேலை செய்கிறேன். கணவர் பெயர் கண்ணன். ஆண்டிப்பட்டி காந்தம்மாள் பால்பண்ணையிலிருந்து எங்கள் ஊருக்கு வந்து கறவை மாடு வாங்கி தருவதாக சொன்னார்கள். பாலமுருகன் என்பவர் கறவை மாடு வாங்கிக் தருவதாக சர்க்கரை அட்டை மற்றும் ஓட்டர் ஐ.டி கேட்டார். நானும் கொடுத்தேன். பால் கறந்து பால் பண்ணைக்கு ஊற்றி அந்தக் கடனை கழித்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். என் புகைப்படமும், சர்க்கரை அட்டையும் மற்றும் என் வாக்காளர் அட்டை ஆகியவைகளை கொடுத்தேன். நான் எந்த வங்கிக்கும் செல்லவில்லை. எனக்கு செங்கம் State Bank of India

தெரியாது. பிறகு எனக்கு வங்கியிலிருந்து நோட்டீஸ் வந்தது. அதன் பிறகுதான் என் பெயரில் கடன் வாங்கியிருப்பது தெரிய வந்தது. கறவை மாடு கொடுக்கவில்லை.

தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் அ.சா.ஆ226ல் உள்ள புகைப்படம் மற்றும் வாக்காளர் அட்டை நகல் மற்றும் ரேஷன் கார்ட்டின் நகல் என்னுடையதுதான். ஃபோட்டோ மட்டும் தான் கொடுத்தேன், கைரேகை எதுவும் வைக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் கைரேகை என்னுடையதல்ல. நான் வங்கியில் விண்ணப்பம் எதுவும் கொடுக்கவில்லை.

தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் அ.சா.ஆ227ல் உள்ள புகைப்படம் என்னுடையதுதான். ஃபோட்டோ மட்டும் தான் கொடுத்தேன், கைரேகை எதுவும் வைக்கவில்லை. நான் வங்கியில் கடன் விண்ணப்பம் எதுவும் கொடுக்கவில்லை.

தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் அ.சா.ஆ228ல் "வேடியம்மாள்" என்ற பெயரில் உள்ள கைரேகை என்னுடையதல்ல. நான் வங்கியில் பணம் எதுவும் வாங்கவில்லை.

இது சம்பந்தமாக சிபிஐ போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>2 முதல் 6 மற்றும் 10ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் கறவை மாடு வைத்து பராமரித்திருக்கிறேன். நான் பள்ளிப்பட்டி வங்கியில் கணக்கு வைத்துள்ளேன். வங்கியின் பெயர் எனக்கு தெரியாது. வங்கியில் கடன் எதுவும் வாங்கவில்லை. மாட்டுலோன் தருவதாக பாலமுருகன் தான் சொன்னார். புகைப்படம், வாக்காளர் அட்டை ஆகியவை பாலமுருகனிடம் கொடுத்தேன். அவர் எங்கள் ஊர்க்காரர். அவர் எனக்கு தெரிந்தவர். காந்தம்மாள் பால்பண்ணையிலிருந்து யாரும் வந்து என்னை அனுகவில்லை. லோன் எதுவும் வாங்கவில்லை. லோன் வாங்கியிருப்பது பற்றி தெரிந்த பிற்பாடு பாலமுருகன் மீது எதுவும் எந்த நடவடிக்கை எடுக்கவில்லை. நான் வங்கியில் கடன் வாங்கிவிட்டு பாலமுருகனை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சிபிஐ என்னை விசாரித்தார்கள். சிபிஐ சொல்லிக்கொடுத்து பொய்சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>**7ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

அ.சா.ஆ226, 227, 228 முதலிய ஆவணங்களில் காட்டப்படும் கைரேகைகள் என்னுடையதுதான் என்ற சொன்னால் சரியல்ல. நோட்டீஸ் வந்த பிற்பாடு சட்டப்படியாக நடவடிக்கை எடுக்கவில்லை. செங்கம் முன்சீப் நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் எனக்கு வரவில்லை. அழைப்பாணை வந்தது என்றாலும் கடன் வாங்கியருப்பது உண்மை என்பதால் நான் பதில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. செங்கம் வங்கிக்கு நான் போகவில்லை என்று நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சிபிஐ சொல்லிக்கொடுத்து செங்கம் SBI வங்கிக்கு எந்தக் காலக்கட்டத்திலும் செல்லவில்லை என்று பொய்சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. கறவை மாடு வாங்கி நான் பயன் அடைந்தேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>**9ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

சிபிஐ அதிகாரிகள் என்னிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஆவணங்களை அவர்களிடம் கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII code of Criminal Procedure)**

**In the Court of XI Additional Special Judge for CBI Cases,**

**Chennai 600 001.**

| | |
|---|---|
| Calender Case | :C.C.No.25/2013 |
| Deposition of witness for | : PW34 |
| Name | : இராசாத்தி |
| Father's Name | :W/o.Dhevaraj |
| Village | : Pulliyampatti Post, |
| Taluk | : Chengam Taluk, Thiruvannammalai. |
| Caste | : |
| Calling | : |
| Religion | : Hindu |
| Age | : 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on this the **12th** day of December 2019.

---

**முதல் விசாரணை**

நான் கருங்காலிப்பட்டியில் குடியிருக்கிறேன். விவசாயம் செய்கிறேன். கணவர் பெயர் தேவராஜ். ஆண்டிப்பட்டி காந்தம்மாள் பால்பண்ணையிலிருந்து எங்கள் ஊருக்கு வந்து கறவை மாடு வாங்கி தருவதாக சொன்னார்கள் மற்றும் சர்க்கரை அட்டை நகல், ஃபோட்டோ, வாக்காளர் அட்டை நகல் ஆகியவைகளை வாங்கி சென்றார்கள். பால் கறந்து பால் பண்ணைக்கு ஊற்றி அந்தக் கடனை கழித்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். என் புகைப்படமும், சர்க்கரை அட்டையும் மற்றம் என் வாக்காளர் அட்டையும் ஆகியவைகளை கொடுத்தேன். நான் எந்த வங்கிக்கும் செல்லவில்லை. எனக்கு செங்கம் State Bank of India

தெரியாது. பிறகு எனக்கு வங்கியிலிருந்து நோட்டீஸ் வந்தது. அதன் பிறகுதான் என் பெயரில் கடன் வாங்கியிருப்பதும், ஏமாற்றியதும் தெரிய வந்தது. கறவை மாடு கொடுக்கவில்லை.

தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் அ.சா.ஆ230ல் உள்ள புகைப்படம் மற்றும் வாக்காளர் அட்டை நகல் மற்றும் ரேஷன் கார்ட்டின் நகல் என்னுடையதுதான். ஃபோட்டோ மட்டும் தான் கொடுத்தேன், இராசாத்தி என்ற பெயரில் உள்ள கையெழுத்து என்னுடையதல்ல. வங்கியில் விண்ணப்பம் எதுவும் கொடுக்கவில்லை.

தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் அ.சா.ஆ231ல் உள்ள புகைப்படம் என்னுடையதுதான். ஃபோட்டோ மட்டும் தான் கொடுத்தேன், அதில் காணப்படும் கையெழுத்து என்னுடையதல்ல. வங்கியில் கடன் விண்ணப்பம் எதுவும் கொடுக்கவில்லை.

தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் அ.சா.ஆ232ல் "ராசாத்தி" என்ற பெயரில் உள்ள கையெழுத்து என்னுடையதல்ல. நான் வங்கியில் பணம் எதுவும் வாங்கவில்லை.

இது சம்பந்தமாக சிபிஐ போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>2 முதல் 6 மற்றும் 10ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் சொந்தமாக நிலம் வைத்து விவசாயம செய்கிறேன். மாடு, கன்று வைத்துள்ளேன். காந்தம்மாள் பால்பண்ணையில் யாரும் எனக்கு தெரியாது. வாக்காளர் அட்டை மற்றும் குடும்ப அட்டை எங்கள் ஊர்காரரிடம் கொடுத்தேனா என்று கேட்டால் எனக்கு ஞாபகமில்லை. இது சம்பந்தமாக யாரிடமும் புகார் கொடுக்கவில்லை. சிபிஐ என்னை விசாரித்தார்கள். சிபிஐ சொல்லிக்கொடுத்து பொய்சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>7ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.சா.ஆ230, 231, 232 முதலிய ஆவணங்களில் காட்டப்படும் கையெழுத்து என்னுடையதுதான் என்ற சொன்னால் சரியல்ல. நோட்டீஸ் வந்த பிற்பாடு சட்டப்படியாக நடவடிக்கை எடுக்கவில்லை. செங்கம் முனசீப் நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் எனக்கு வரவில்லை. அழைப்பாணை வந்தது என்றாலும் கடன் வாங்கியருப்பது உண்மை என்பதால் நான் பதில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. செங்கம் வங்கிக்கு நான் போகவில்லை என்று நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சிபிஐ

சொல்லிக்கொடுத்து செங்கம் SBI வங்கிக்கு எந்தக் காலக்கட்டத்திலும் செல்லவில்லை என்று பொய்சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. கரவை மாடு வாங்கி நான் பயன் அடைந்தேன் என்று சொன்னால் சரியல்ல. உண்மையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**9ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சிபிஐ அதிகாரிகள் என்னிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஆவணங்களை அவர்களிடம் கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**